(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 333.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2013 திசெம்பர் 20, வெள்ளிக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1965/ '11

1.

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) காலி மாவட்டத்தின் நாகொட பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள மலாமுர கால்வாய்க்கு குறுக்காக பாலமொன்றை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டு பல வருடங்கள் கடந்துள்ள போதிலும், இது வரை அதன் நிர்மாணிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாலத்தின் நிர்மாணிப்புப் பணிகள் இடையில் நிறுத்தப்படுவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) பிரதேச மக்களின் போக்குவரத்து வசதிக்காக மேற்படி பாலத்தை துரிதமாக அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மலாமுர கால்வாயின் குறுக்காக பாலத்தை அமைப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) நிதி ஒதுக்கப்பட்டிருப்பின், மேற்படி பாலத்தின் அமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2471/ '12

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தொலைத்தொடர்புகள், தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அநுராதபுரத்தில் இடம்பெற்ற "தெயட்டகிருல" கண்காட்சிக்கு இணைந்ததாக அநுராதபுர மாவட்டத்தில் தாபிக்கப்பட்ட விவசாய மேம்பாட்டுப் பண்ணைகளுக்காக செலவிடப்பட்ட தொகையையும்;

(ii) அப்பண்ணைகளால் கிடைக்கப்பெற்ற பயன்களையும்;

(iii) "தெயட்டகிருல" கண்காட்சிக்கு முன்னர் ஒயாமடுவ பண்ணைக்குச் சொந்தமாகவிருந்த 500 பசுக்கள் இப்போது எங்கே உள்ளன என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) “தெயட்டகிருல” கண்காட்சிக்குச் சமாந்தரமாக தாபிக்கப்பட்ட நிரந்தர நீர் வழங்கல் திட்டத்திற்காக செலவிட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) அத்திட்டத்தால் “தெயட்டகிருல” முடிவடைந்த பின்னர் பயன்பெறும் குடும்பங்களின் எண்ணிக்கையையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) ஒயாமடுவ - மனிஸ்ஸாகமுவ - தந்திரமலே புகையிரதச் சேவையை நடத்துவதற்கு ஏற்பட்ட செலவையும்;

(ii) அப்புகையிரதத்தினால் “தெயட்டகிருல” நடைபெற்ற 9 நாட்களிலும் ஈட்டப்பட்ட வருமானம் மற்றும் பயன்களையும்;

(iii) மேற்கூறப்பட்ட புகையிரதச் சேவையை நடத்துவதற்காக தாபிக்கப்பட்ட பௌதீக கட்டுமானங்களை கழற்றி அகற்றுவதற்காக செலவிடப்பட்ட தொகையையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2506/ ’12

3.

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) வட மாகாணத்தில் சம்பத்நுவர பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள கிரிஇப்பன்வெவ வித்தியாலயத்தில் பௌதீக வளங்கள் மற்றும் மனித வளங்களில் பற்றாக்குறைகள் நிலவுகின்றன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) கிரிஇப்பன்வெவ வித்தியாலயத்தில் நிலவுகின்ற பௌதீக வள மற்றும் மனித வளங்களின் பற்றாக்குறைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி குறைபாடுகளை நிவர்த்திசெய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில் அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4161/ ’13

4.

கௌரவ துனேஷ் கங்கந்த,— பிரதம அமைச்சரும் புத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர்களையும் சனாதிபதியின் ஆலோசகர்களையும் நியமிக்கும்போது கடைப்பிடிக்கப்படும் நடைமுறை யாதென்பதையும்;

(ii) மேற்படி பதவிகளுக்கு நியமிக்கும்போது கவனத்தில் கொள்ளப்படும் குறைந்தபட்ச கல்வித் தகைமைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4308/ '13

5.

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அறிவுடைச் சமூகத்திற்கான கல்விச் செயற்றிட்டத்தின் (EKSP) கீழ் பாடசாலைகளுக்கு கணினிகள் வழங்கப்பட்டனவா என்பதையும்;

(ii) அவ்வாறெனின், மேற்கூறிய கருத்திட்டத்தின் கீழ் கணினிகள் வழங்கப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கையையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) 2012 டிசம்பரில் உள்ளவாறு,

(i) EKSP கருத்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட கணினிகளின் எண்ணிக்கையையும்;

(ii) கணினி கொள்வனவுக்கான ஒப்பந்தங்கள் வழங்கப்பட்ட வழங்குனர்களின் பெயர்களையும்;

(iii) வழங்கப்பட்ட ஒவ்வொரு ஒப்பந்தத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட கணினிகளின் எண்ணிக்கையையும்;

(iv) வழங்கப்பட்ட ஒவ்வொரு ஒப்பந்தத்தின் கீழ் வழங்குனருக்கு/ வழங்குனர்களுக்கு செலுத்தப்பட்டுள்ள விலையையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) EKSP கருத்திட்டத்திற்கான கணினி வழங்குநர்களைத் தெரிவுசெய்வதற்கு பொறுப்பாயுள்ள அமைப்பையும்;

(ii) தெரிவுச் செயன்முறையில் வழங்குநர்களை மதிப்பிடுவதற்கு மேற்கொள்ளப்படும் முறைமையையும்;

(iii) தெரிவுச் செயன்முறையில் விதித்துரைக்கப்பட்ட தகவுதிறன்களை தெரிவுசெய்யப்பட்ட வழங்குனர்கள் கொண்டிருந்தார்களா என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4342/ '13

6.

கௌரவ கரு ஜயசூரிய,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எதிர்த்தரப்பு ஆட்களின் தொலைபேசிகளை ஒற்றுக் கேட்பதில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், மேற்கூறப்பட்டவாறு யாருடைய தொலைபெசிகள் ஒற்றுக்கேட்கப்படுகின்றன என்பதையும்;

(iii) மேற்படி தொலைபேசிகளை ஒற்றுக்கேட்பதற்கான காரணத்தையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4417/ '13

7\.

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மேல் கொத்மலை நீர் மின் உற்பத்தி நிலையக் கருத்திட்டத்தின் ஆரம்ப திட்டத்திற்கு உரித்தானதாக இருந்த டெவோன், சென்ட் அன்ட்ரூஸ், பூண்டுலு ஓயா, பூனா ஓயா மற்றும் ரம்பொட ஆகிய நீர் மூலங்கள், வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள மேற்படி கருத்திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) இந்நிலைமையின் கீழ் ஆரம்ப திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான மின் உற்பத்தியை, மேற்படி நீர் மின் உற்பத்தி நிலையக் கருத்திட்டத்தின் ஊடாக எதிர்பார்க்க முடியுமா என்பதையும்;

(iii) எதிர்காலத்தில் இவ்வனைத்து நீர் மூலங்களையும் அல்லது அவற்றில் ஒரு பகுதியை, வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள மேற்படி நீர் மின் உற்பத்தி நிலையக் கருத்திட்டத்தின் வினைத்திறனை மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றதா என்பதையும்;

(iv) ஆமெனில், அவ்வாறு பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற நீர் மூலங்கள் யாவை என்பதையும்;

(v) தேவைகளுக்கு அமைய மேற்படி நீர் மின் உற்பத்தி நிலையக் கருத்திட்டத்துடன் ஒன்றிணைக்கக்கூடியவாறு மேற்படி நீர் மூலங்களில் அவசியமான நிர்மாணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4436/ '13

8\.

கௌரவ (திருமதி) தலதா அத்துகோரல,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி திரிவானாகெட்டியவிலிருந்து அகலவத்த வரையிலான வீதி காபர்ட் இடப்பட்டு அபிவிருத்தி செய்யப்படுகின்றதா;

(ii) அவ்வாறு காபர்ட் இடப்படவுள்ள பாதையின் மொத்த நீளம் எவ்வளவு;

(iii) அதற்காக மதிப்பிடப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு;

(iv) அதற்கான உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டுள்ள நிறுவனங்கள் யாவை;

(v) உடன்படிக்கையின்படி அந்த வீதியின் அபிவிருத்திப் பணிகள் முடிவடையவுள்ள திகதி யாது;

(vi) தற்போது காபர்ட் இடப்பட்டு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள மொத்த நீளம் எவ்வளவு;

(vii) வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள அளவு ஒவ்வொரு கம்பெனிக்கும் அமைய வெவ்வேறாக எவ்வளவு;

(viii) இது வரை இக் கம்பனிகளுக்கு செலுத்தப்பட்டுள்ள பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2562/ '12

9.

கௌரவ சஜித் பிரேமதாச,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையிலுள்ள பல்வேறான உள்ளூராட்சி நிறுவனங்களிலும் பணியாற்றுகின்ற மக்கள் பிரதிநிதிகளுக்கு மாதாந்தம் கிடைக்கும் சம்பளம் யாதென்பதையும்;

(ii) மேற்படி மக்கள் பிரதிநிதிகளுக்கு போதியளவு சம்பளம் கிடைக்கின்றதா என்பதையும்;

(iii) உள்ளூராட்சி நிறுவனங்களில் பணியாற்றும் மக்கள் பிரதிநிதிகளுக்கு மக்கள் சேவைகளை நிறைவேற்றும் பொருட்டு வழங்கப்படும் வசதிகளும் கொடுப்பனவுகளும் யாவை என்பதையும்;

(iv) போற்றத்தக்க விதத்தில் மக்கள் சேவையினை வழங்குவதற்கு குறித்த வசதிகளும் கொடுப்பனவுகளும் போதுமானதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2716/ '12

10.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரசாங்கத்தினால் 2012 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையையும்;

(ii) அவ்வீடுகளை நிர்மாணித்த நிறுவனங்களையும்;

(iii) செலவுசெய்யப்பட்ட பணத்துக்கான மூலங்களையும்;

(iv) உரிமையாளரினால் அவர்கள் பெற்ற வீட்டுக்காக செலுத்த வேண்டிய தொகையையும்;

(v) அத்தகைய வீடுகள் ஒதுக்கப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியலையும்;

(vi) மேற்கூறிய ஒரு வீட்டின் நிர்மாணத்துக்காக செலுத்தப்பட்ட செலவினத்தையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சர்,— தேசிய தொழில்துறை முகாமைப் பயிற்சி நிறுவகம் (திருத்தம்),— 1976 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, தேசிய தொழில்துறை முகாமைப் பயிற்சி நிறுவகச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள் (இல.1),— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 9 ஆம் மற்றும் 10 ஆம் இலக்க பிரேரணைகள் மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள் (இல. 2),— 2010.07.09 மற்றும் 2013.11.26 ஆகிய தினங்களில் பாராளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைகளால் தடைபெறாமல், ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 தொடக்கம் 10 ஆம் இலக்கங்கள் வரையான பிரேரணைகள் மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 7, 70(2) மற்றும் 70(3) ஆம் இலக்க நிலையியற் கட்டளைகளின் ஏற்பாடுகளிலிருந்தும் விலக்குப்பெறுமாக.

4.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2014, சனவரி மாதம் 21ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை பி.ப. 1.00 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

5.

கௌரவ கனக ஹேரத்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"தொழில்நுட்பத்தையும் சமூக சேவையையும் உயர்த்துவதற்கான கல்வி நிலையத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

6.

கௌரவ எம்.பீ. பாறூக்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"இலங்கை ஒளிப்படவியலாளர் சங்கங்களின் பேரவையைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2014) — (ஒதுக்கப்பட்ட இருபத்தி மூன்றாவவது நாள்) — குழு ஆய்நிலை (பரிசீலனை, திசெம்பர் 19)

* 2.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான உற்பத்தி வரி தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2013 நவெம்பர் மாதம் 21 ஆம் திகதிய 1837/29 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.12.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ், துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2013 நவெம்பர் மாதம் 22 ஆந் திகதிய 1837/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.12.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியால் ஆக்கப்பட்டு, 2013 நவெம்பர் மாதம் 21 ஆந் திகதிய 1837/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.12.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியால் ஆக்கப்பட்டு, 2013 நவெம்பர் மாதம் 16 ஆந் திகதிய 1836/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.12.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

கைத்தொழில், வாணிப அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14(1) ஆம் பிரிவின் கீழான செஸ் வரி தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரின் உடன்பாட்டுடன் கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2013 நவெம்பர் மாதம் 21 ஆம் திகதிய 1837/30 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.12.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

கைத்தொழில், வாணிப அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 (1) ஆம் பிரிவின் கீழான செஸ் வரி தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரின் உடன்பாட்டுடன் கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2013 நவெம்பர் மாதம் 21 ஆம் திகதிய 1837/31 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.12.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— உண்ணாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— வருமானம் மீதான வரிகள் தொடர்பில் இரட்டை வரிவிதிப்பனவைத் தவிர்ப்பதற்காகவும் வரி செலுத்தாது தட்டிக்கழிப்பதைத் தடுப்பதற்குமாக, 2011 யூன் மாதம் 24ஆம் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் பஹ்ரைன் இராச்சியத்தின் அரசாங்கத்திற்கும் இடையே செய்துகொள்ளப்பட்டதும், 2013.12.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 97(1)(அ) ஆம் பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 2013.12.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழான இறக்குமதித் தீர்வைகள் சம்பந்தமான தீர்மானம்.

(2013 நவெம்பர் மாதம் 21ஆந் திகதிய 1837/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஏற்றுமதிகள், இறக்குமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரை மற்றும் 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஏற்றுமதிகள், இறக்குமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4(3) ஆம் பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியால் ஆக்கப்பட்டு, 2013 நவெம்பர் மாதம் 21 ஆம் திகதிய 1837/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், 2013.12.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடனும் 19 ஆம் உட்பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2013 யூலை மாதம் 31 ஆந் திகதிய 1821/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 12.

இலங்கை கொள்கைக் கற்கைகள் நிறுவகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 13.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 14.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 15.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 16.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்துக்குகாலம் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 மே மாதம் 13 ஆந் திகதிய 1810/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 17.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 18.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

19.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

20.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

21.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை

22.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

23.

மைத்திரிபால சேனாநாயக்க மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

24.

ஹேண்ட்ஸ் பொ எடியுகேஷன் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## தினப்பணிகள் மீதான திருத்தங்கள் பற்றிய முன்னறிவித்தல்

அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2014) எனும் சட்டமூலத்திற்குக் குழு ஆய்நிலையில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் திருத்தங்களைத் "தினப்பணிக்கான அனுபந்தம்" எனும் தனியிதழிற் பார்க்க.

---